10/=
பக்கங்கள் 08
Registered as a Newspaper in Srilanka
# எதிரொலி
Ethiroli
குரல் 01 அதிர்வு 157 சனிக்கிழமை ஒக்ரோபர் 28 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## பசிலின் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக்.28

பசில் ராஜபக்ச மற்றும் திவி நெகும அபி விருத்தி திணைக்களத்தின் முன்னாள் பணிப் பாளர் நாயகம் கித்சிறி ரணவக்க ஆகியோ ருக்கு எதிராக சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 25 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.


கொழும்பு மேல் நீதிமன்றில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்

06

### கடன் பிரச்சினை

# தாயும் மூன்று பிள்ளைகளும் தற்கொலை

அரியாலையில் நேற்றுப் பரிதாபம்





யாழ்ப்பாணம், ஒக்

ஒரு கோடியே 17 இலட்சம் ரூபாவைக் கடனாக வாங்கியவர்கள் அக்கடனைத் திரும்பக் கொடுக்க மறுத்த நிலையில் கடன் கொடுத்த குடும்பம் ஒன்று நெருக் கடி தாங்க முடியாத நிலையில் தற்கொலை செய்துகொண்டுள்ளது. அரியாலையில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் மூன்று பச்சிளங் குழந்தைகள் உட்பட பெண் ஒருவர் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இவரது கணவரும் அண் மையில் தற்கொலை செய்து உயிரிழந் திருந்தார்.

எ.வி.ஒழுங்கையை சேர்ந்தவர் கிரு ஷாந்தன் அவரது மனைவி சுனேந்திரா (வயது–28) அவர்களுக்கு ஹர்ஷா (வயது–4), சஜித் (வயது–2), சரவணா (வயது–1) என மூன்று குழந்தைகள் உள்ளனர்.

குடும்பத்தின் தலைவரான கணவன் கிருஷாந்தன் தனது குடும்ப நண்பர் ஒருவரிடம் ஒரு கோடியே 17 இலட்ச ரூபா பணத்தைக் கடனாக கொடுத்துள் ளார். அக்கடன் தொகையை நண்பர் கொடுக்காமல் ஏமாற்றி வந்துள்ளார். பிற ரிடமும் பணம் பெற்று நண்பனுக்கு என பெருமளவான கடன் கொடுத்த காரணத் தால் பூர்வீகச் சொத்துக்கள் சிலவற்றை விற்கும் நிலைக்கு கிருஷாந்தன் தள்ளப் பட்டுள்ளார். நண்பனுக்கு கடன் கொடுக் கும் போது சாட்சியமாக நின்ற நண்பனின் மனைவி மற்றும் நண்பனின் தம்பி ஆகியோரிடம் கடனைத் திரும்பக் கேட்டிருக்கிறார். கடன் எந்தவிதமான

06

## உயிர் மாய்த்த குடும்பம் உருக்கமான கடிதம்!

யாழ்ப்பாணம், ஒக்.28

அரியாலையில் தனது மூன்று குழந்தைகளுக்கும் நஞ்சு கொடுத்து தானும் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்ட பெண் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனுக் கும், தமது குடும்பத்தாருக்கும் உருக்கமான கடிதம் எழுதியுள் ளார். தற்கொலை செய்துகொண்ட குறித்த குடும்பத்தினரின் வீட்டுக் குச் சென்ற பொலிஸார் விசாரணை களை மேற்கொண்ட போது குறித்த கடிதம் மீட்கப்பட்டுள்ளது.

தற்கொலை செய்துகொண்ட பெண் எழுதியதாகக் கூறப்படும் கடிதம் வருமாறு,

மேன்மை தங்கிய இளஞ்செழி யன் அவர்களுக்கு எனது தாழ் மையான வணக்கம்.

எனது பெயர் திருமதி

06

### அதிரடிப்படை முகாமில்

## தடயப்பொருள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.28

அரியாலை கிழக்கு துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை மேற்கொண்டவர் கள் பயன்படுத்தியதாக சந்தேகிக்கப் பட்ட முச்சக்கர வண்டி பண்ணையில் உள்ள விசேட அதிரடிப்படை முகாமில் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விசேட அதிரடிப் படையா குறித்த இளைஞனைச் சுட்டது என்ற கோணத்தில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அரியாலை கிழக்கு பகுதியில் இனந் தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் படுகாய மடைந்து, பின்னர் சிகிச்சை

06

## பங்காளிகளுடன் இன்று சம்பந்தன் சந்திப்பு

இடைக்கால அறிக்கை குறித்து ஆராய்வு

கொழும்பு, ஒக்.28

பரபரப்பான அரசியல் சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு இன்று மாலை 6 மணியளவில் ஒன்றுகூடவுள்ளது. கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனின் அலு வலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாக ஆராய்வ தற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கடந்த 19ஆம், 20ஆம் திகதிகளில் நடத்தப்படவிருந்தது. எனினும், நாடாளுமன்றக் குழுவைக் கூட்டு வதற்கு முன்பாக, ஒருங்கிணைப்புக் குழுவைக் கூட்டி கொள்கை ரீதி யான தீர்மானத்தை எடுக்க வேண் டும் என்று கூட்டமைப்பின் பங் காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல். எவ். வலியுறுத்தியிருந்தது.

அதேவேளை, ஐ.நா சிறப்பு அறிக் கையாளர் பப்லோ டி கிரெய் புடனான சந்திப்புகள் மற்றும்

06





## புழுதியாற்றுக் குளத்தில் வெடிபொருட்கள் மீட்பு

கிளிநொச்சி, ஒக்.28

கிளிநொச்சி வட்டக்கச்சி புழுதியாறு குளத் தில் நேற்று முன்தினம் இரவு அதிரடிப்படையி னரால் வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள் ளன. யுத்த காலத்தில் அனுராதபுரம் விமான நிலைய தாக்குதலுக்கு ஒத்திகை இடம்பெற்ற விமான ஓடுபாதைகள் அமைந்துள்ள இடத் தில் இந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள் ளன. இதன்போது 60 மில்லி மீற்றர் உடைய 10 மோட்டார் செல்கள், 81 மில்லி மீற்றர் உடைய 01 மோட்டார் செல் என்பன இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. இரணைமடு விமானப் படையினர் இராமநாதபுரம் பொலி ஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படை யில் நீதிமன்ற அனுமதியுடன், விசேட அதிர டிப்படையினரால் இவை மீட்கப்பட்டு அழிக் கப்பட்டுள்ளன. (எ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர் ஆசிரியர்கள் அனைவருக்கும் நியமனம்



வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தொண்டர் ஆசிரியர்கள் ஆசிரியர் சேவையில் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. குறிப்பாக வடக்கில் நேர்முகத் தேர்விற்கு தோற்றிய தொண்டர் ஆசிரியர்களில் தகுதியானவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 676 தொண்டர் ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் திரு சிவ ஞானசோதி ஆகியோருடன் தான் கலந்துரையாடியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இவர்களின் சேவைக்காலங்கள் உறுதிப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் எழுத்துப் பரீட்சை நடாத்தாமலும் சம்பவ திரட்டு புத்தகங்களின் பதிவுகள் இல்லாமலும் இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## புத்தகக் கண்காட்சி



தேசிய வாசிப்பு மாத நிகழ்வினையொட்டி யாழ். பொது நூலகத்தில் புத்தகக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நூலகப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த கண்காட்சி நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இந்த கண்காட்சியில் பல மாணவ மாணவிகள் பங்கேற்றிருந்தனர். குறித்த கண்காட்சி இன்றும் நடைபெறவுள்ளது. (உ)

# சிறுமியை ஏமாற்றிய இளைஞனுக்கு சிறை

சிறுமியை காதலித்து கர்ப்பமாக்கிய குற்றத்துக்காக முல்லைத்தீவு இளைஞன் ஒருவனுக்கு வவுனியா மேல் நீதிமன்றம் நேற்று 10 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

முல்லைத்தீவு மாங்குளம் ஒலுமடு பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய நாகராசா ஜெகதீஸ்வரன் என்ற இளைஞன் கடந்த 2011 ஆம் ஆண்டு 16 வயது சிறுமியை காதலித்து கர்ப்பமாக்கியதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. குறித்த இளைஞன் அப் பெண்ணை திருமணம் செய்வதாக வாக்களித்து பின்னர் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்திருந்தார்.

இந்நிலையில் சிறுமி விடயம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இதற்கமைய குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்தன.

கடந்த ஒகஸ்ட் மாதம் 24 ஆம் திகதியன்று சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இந்த நிலையில், சாட்சியங்கள் மன்றினால் பரிசீலிக்கப்பட்டு நேற்று நீதிவான் 10 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (உ)

# 16 வருடங்களின் பின் மரண தண்டனை

கொழும்பு, ஒக்.28

அயலவர் ஒருவரை கத்தியால் குத்திக் கொலை செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த சகோதரர்கள் இருவரை, குற்றவாளிகளாக இனங்கண்ட கொழும்பு மேல் நீதிமன்றம் அவ்விருவருக்கும் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

16 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பான தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது. வழக்கின் நிறைவில் அவ்விருவரையும் குற்றவாளிகளாக இனங்கண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆர் ஹெய்யந்துடுவ, அவ்விருவருக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

கொழும்பு, கொட்டாஞ்சேனைப் பகுதியைச் சேர்ந்த என்டன் பீற்றர் டெனிகன் பெர்ணான்டோ (வயது 45) மற்றும் என்டன் சேவியர் பெர்ணான்டோ (வயது 40) ஆகிய இருவருக்குமே இவ்வாறு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. 2001 செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு அண்மித்த நாளொன்றிலோ, கொட்டாஞ்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த இந்திக பொன்சேகா என்பவரை கத்தியால் குத்திக்கொலைச் செய்தனர் என்று இவ்விருவருக்கும் எதிராக சட்டமா அதிபரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (உ)

# நடமாடும் மீன் விநியோகம்

கொழும்பு, ஒக்.28

பொது மக்களுக்கு குறைந்த விலையில் மீன்களை விநியோகிப்பதற்கான நடமாடும் சேவையினை கடற்றொழில் கூட்டுத்தாபனம் நேற்று ஆரம்பித்துள்ளது.

அண்மைய நாட்களில் தெற்கு உள்ளிட்ட கடற்பரப்புகளில் அதிகளவான மீன்கள் பிடிக்கப்பட்டுள்ள காரணத்தினால் இந்த சேவையினை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும் மீன் விலை தற்போது வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (உ)

# தேர்தல் வர்த்தமானி நவம்பர் 1இல்

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் நவம்பர் மாதம் 1ஆம் திகதியன்று வெ ளியிடப்படும் என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார். நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (உ)

## பதவி உயர்வு இல்லை

கல்வி அமைச்சினால் கடந்த மூன்று வருடங்களாக ஆசிரியர்களுக்கான பதவி உயர்வு குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

# அரசியல்யாப்பு கலந்துரையாடல்



மாந்தை, ஒக்.28

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள கூழாவடிப்பிள்ளையார் ஆலயத்தில் மக்களுக்கு அரசியல் யாப்பு தொடர்பான தெளிவுபடுத்தல் கலந்துரையாடல் ஒன்று நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா மற்றும் விரிவுரையாளர்கள் அப்பகுதி அமைப்புக்கள் மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (உ-212)

# அபிவிருத்தி உத்தியோகத்தர் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்பு



வாழைச்சேனை, ஒக்.28

வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் கே.சுகிர்தரன் தாக்கப்பட்டதை கண்டித்து செயலக உத்தியோகத்தர்கள் கறுப்பு பட்டியால் வாயைக் கட்டி செயலக முன்பாக நேற்றுக் காலை எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அபிவிருத்தி உத்தியோகத்தரை தாக்கிய மூவரும் கைது செய்யப்பட வேண்டும் என தெரிவித்து, சுமார் இரண்டு மணிநேரம் கடமையைப் புறக்கணித்து உத்தியோகத்தர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த இடத்துக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் சம்பவம் தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என உறுதியளித்ததையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
சனி, 28 ஒக்ரோபர் 2017 ethirolijaffna@gmail.com

# கடன் கொலைகள்

கடந்த வாரம் கந்துவட்டிக் கொடுமையால் தமிழகத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் தீக்குளித்து, அதில் இரு குழந்தைகளும், தாயும் உயிரிழந்த காட்சிகள் புகைப்படங்களாக சமூக ஊடகங்களில் உலவி, பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தன.

எங்கேயோ நடந்த அந்தக் கூட்டுத் தற்கொலையே நம்மை அதிரச் செய்து அடங்குவதற்கிடையில், எங்கள் நிலத்திலேயே அதேபோன்று இன்னொரு குடும்பமும் கூட்டாகத் தற்கொலையான செய்தி ஒரு உலுக்கு உலுப்பியுள்ளது. இந்தக் கூட்டுத் தற்கொலைகளுக்குப் பின்னணியிலும் கடன் பிரச்சினையே இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. கடன் பிரச்சினை காரணமாக குறித்த குடும்பத் தலைவர் இரு மாதங்களுக்கு முன்னர் தற்கொலை செய்திருந்தார். இந்த நிலையில் அவரின் மனைவி தன் 3 பிள்ளைகளுக்கும் ஐஸ்கிறீமுக்குள் நஞ்சைக் கலந்து கொடுத்து, தானும் குடித்து குடும்பத்தோடு தற்கொலை செய்துள்ளார். இந்தக் கூட்டுத் தற்கொலை குடாநாட்டையே பதறச் செய்துள்ளது.

முன்னைய காலங்களில் யாரேனும் தற்கொலை செய்து கொண்டால் அதற்கு காதல் பிரச்சினையோ, குடும்பச் சண்டையோ, பரீட்சைத் தோல்வியோதான் காரணிகளாக இருக்கமுடியும். ஆனால் இப்போதெல்லாம் அந்தக் காரணிகளை விடவும் கடன் தொல்லையால் காவு கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கையே அதிகமாக இருக்கின்றது.

தங்கள் பொருளாதாரக் கொள்ளளவுக்கும் மேலாக அதிக வட்டியில் கடனைப் பெற்றுக் கொண்டவர்கள், எந்த நோக்கத்துக்காக அதனை வாங்கினார்களோ அதில் எதிர்பாராதவிதமாகச் சறுக்கினால், அவ்வளவுதான். முதலுக்கு மேலால் மலையாக வளர்ந்து நிற்கும் வட்டியைக் கூட கட்ட முடியாத நிலையில் கையைப் பிசைய வேண்டியதுதான். எவ்வளவு நாளைக்குத்தான், கடன் கொடுத்தவர் வந்து வீட்டில் உள்ளோருக்கு முன்னால் 'கேளாக் கேள்வி 'கேட்கையில், நிறம் கரிந்திட, நிலம் விரல் கிளைந்திட, தலை குனிந்து நிற்க முடியும்? ஒரு கட்டத்தில் கடன்பட்டான் நெஞ்சம், கல்நெஞ்சமாகி, ஒரு முடிவைத் தேடும். அந்த முடிவின் செயற்படுகை நாலு முழம் கயிறாகவோ, நஞ்சுப் போத்தலாகவோ, கைவிடப்பட்ட கிணறாகவோ இருக்கும். ஆனால் தற்கொலை செய்துவிட்டால் மட்டும் எல்லாம் தீர்ந்து விடுவதில்லை.

குடும்பத் தலைவர் தூக்கில் தொங்கினாலும், கடன் கொடுத்தோர் இரக்கம் காட்டுவதில்லை. தொடர்ந்தும் அவர்கள் தங்கள் கடனை எப்படியாவது வசூலித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் , குடும்பத்தில் எஞ்சியுள்ளவர்களுக்குக் குடைச்சல் கொடுப்பார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைதான் நேற்று மாண்டுபோன அரியாலைக் குடும்பத்துக்கு நிகழ்ந்திருக்க வேண்டும். தான் மாண்டுபோனால் எஞ்சியிருக்கும் தன் பிள்ளைகளையும் கடன் நிம்மதியாக இருக்காவிடாது என்று அந்தத் தாய்க்கு தெரிந்திருக்க வேண்டும். அதனால் உயிரோடு இருந்து செத்துக் கொண்டிருப்பதை விடவும், செத்து வாழ்ந்துவிட முடிவெடுத்து பிள்ளைகளுக்கு நஞ்சூட்டி விட்டு, தானும் உயிர் துறந்துள்ளார் அந்தத் தாய். பலருக்கும் இந்தக் கூட்டுத் தற்கொலை கோழைத்தனமான முடிவாகவே தெரியும். ஆனால் இறந்து போனவர்களுக்கு மட்டுமே கடன் தொல்லையின் வலி தெரியும். இப்படி இன்னும் எத்தனை குடும்பங்களைக் கடன் தொல்லை காவு கொள்ளப்போகிறதோ? வெறுமனே கண்ணீர் விட்டு, கையாலாகதவர்களாக இருக்கமட்டுமே நம்மால் முடியும். கடனை ஒழிக்க முடியுமா? எதையெல்லாமோ சட்டம் போட்டு தடுக்கும் அரசு இந்தக் கடன் தொல்லைத் தற்கொலைகளைத் தடுத்து நிறுத்தாதா? காத்திருப்போம்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"



# கொழும்பை மிரட்டும் அமெரிக்க நாசகாரிகள்

கொழும்பு, ஒக்.28

அமெரிக்க கடற்படையின் யுஎஸ்எஸ் நிமிட்ஸ் என்ற விமானந்தாங்கி போர்க்கப்பல் தலைமையிலான நாசகாரி தாக்குதல் கப்பல்களின் அணி இன்று கொழும்புத் துறை முகத்துக்கு வரவுள்ளது. இந்த தாக்குதல் அணியில் விமானந் தாங்கிக் கப்பலான யுஎஸ்எஸ் நிமிட்ஸ், அதிவேகப் போர்க்கப்பலான யுஎஸ்எஸ் பிரின்சிரோன், நாசகாரிக் கப்பல்களான யுஎஸ்எஸ் ஹவார்ட், யுஎஸ்எஸ் சூப், யுஎஸ்எஸ் பின்க்னி, யுஎஸ்எஸ் கிட் ஆகியனவே கொழும்பு வரவுள்ளன.
எதிர்வரும் 31ஆம் திகதி வரை இந்த போர்க் கப்பல்கள் கொழும்பில் தரித்து நிற்கும் என்று அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது. அண்மையில் இருதரப்பு கப்பல் தயார் நிலை ஒத்துழைப்பு பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, சிறிலங்கா - அமெரிக்க கடற்படைகளுக்கிடையிலான உறவுகளின் வளர்ச்சியை பிரதிபலிக்கும் வகையில் இந்தப் போர்க் கப்பல்கள் கொழும்பு வரவுள்ளன.
1985ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமெரிக்காவின் விமானந்தாங்கிக் கப்பல் ஒன்று இலங்கைக்கு பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும். (உ)

# அனிகாவுக்கு அச்சுறுத்தல் இல்லை

கொழும்பு, ஒக்.28

பிணைமுறி விவகாரத்தில் சாட்சியமளித்த அனிகா விஜேரத்னவுக்கு மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன என்பது தொடர்பாக, குற்றப் புலனாய்வுப் பிரிவால் மேற்கொள்ளப்படும் விசாரணை தொடர்கிறது எனவும், அவ்விடயத்தில் அரசியல் தலையீடு காணப்படவில்லை எனவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.
அனிதாவுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகள் அரசியல் தலையீட்டுக்கு உள்ளாகியுள்ளன எனவும், அதன் காரணமாக அவ்விசாரணைகளை நிறுத்துமாறு அல்லது அல்லது வேறு இடத்து மாற்றுமாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக செய்திகள் வெளியாகியிருந்தன.
இந்தநிலையில் இது தொடர்பாக விளக்கமளித்துள்ள காவல்துறைப் பேச்சாளர் ருவன் குணசேகர, அவ்வாறான தலையீடுகள் எவையும் காணப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார். (உ)

# "கங்காரு" தலைவர் கட்டுநாயக்க வருகிறார்?

மெல்பேர்ன், ஒக். 28

ஆஸ்திரேலிய பிரதமர் மல்கம் ரேன்புல் மிகக்குறுகிய நேர பயணமொன்றை மேற்கொண்டு அடுத்த வாரம் கொழும்பு வந்து செல்லவிருக்கிறார் என்று ஆஸ்திரேலிய தகவல்கள் தெரிவித்துள்ளன.
நீதிமன்றத் தீர்ப்பொன்றினை அடுத்து நாடாளுமன்ற பெரும்பான்மை பலத்தை இழந்து மிகப்பெரிய அழுத்தத்தினை சந்தித்துள்ள ஆஸ்திரேலியாவின் ஆளும் லிபரல் கட்சி எதிர்வரும் டிசெம்பர் மாதம் இடம்பெறவுள்ள இடைத்தேர்தலுக்கு தயாராகிவருகிறது. ஆட்சியை தீர்மானிக்கவுள்ள இந்தத் தேர்தல் மிகமுக்கியமாக கருதப்பட்டாலும் ஏற்கனவே திட்டமிட்டபடி நேற்றிரவு ஆஸ்திரேலிய பிரமதர் இஸ்ரேலுக்கு பயணமாகியுள்ளார். முதலாம் உலகப்போரின்போது துருக்கிய படைகளுக்கு எதிராக ஆஸ்திரேலிய படைகள் மேற்கொண்ட மிகமுக்கியமான சமர் ஒன்றின் நூறாவது ஆண்டு நிறைவு நினைவுதின நிகழ்வுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன. இதில் கலந்துகொள்ளும் ஆஸ்திரேலிய பிரதமர், நாடு திரும்பும் வழியில் மிகக்குறுகிய பயணமொன்றை கொழும்புக்கு மேற்கொள்ளவுள்ளார் என்று தெரியவருகிறது. (உ)

# பாராளுமன்ற விழா

தென்மராட்சி, ஒக்.28

மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலய மாணவர் பாராளுமன்ற நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

செல்லத்துரை மண்டபத்தின் அதிபர் சு.சிவானந்தன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.
பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளார் சு.சுந்தரசிவமும் சிறப்பு விருந்தினராக ஜே/319 கிராம சேவையாளர் சு.உலகநாதனும் கௌரவ விருந்தினராக பிரான்ஸ் பழைய மாணவர்கள் திரு.திருமதி.ஐ.செல்வராசாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-4)

# திலக் மாரப்பன சீனா விஜயம்

கொழும்பு, ஒக்.28

வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன நாளை சீனாவுக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யியின் அழைப்பை ஏற்று நாளை சீனா புறப்பட்டுச் செல்லும் அவர் அங்கு நவம்பர் 4ஆம் திகதி வரை தங்கியிருப்பார் எனக் கூறப்பட்டுள்ளது. இது திலக் மாரப்பனவின் சீனாவுக்கான முதலாவது அதிகார பூர்வ பயணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது பயணத்துக்கு சீனா முக்கியத்துவம் அளிக்கிறது என்று சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜெங் சுவாங் தெரிவித்துள்ளார்.
இருதரப்பு உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடைவதைக் கொண்டாடும் நிகழ்வுகளிலும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பங்கேற்பார் என்றும் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (உ)

# முதியோர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக்.28

அரியாலை வடமேற்கு மூத்த பிரசைகள் நலன்புரிச் சங்கம் நடத்தும் முதியோர்தின விழா இன்று மாலை நான்கு மணிக்கு நடைபெறவுள்ளது.

அரியாலை காந்தி நிலைய வெள்ளி விழாஅரங்கில் சங்கத் தலைவர் கா.தில்லையம்பலம் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெறவுள்ளது. நிகழ்வின் பிரதமவிருந்தினராக யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் கலந்துகொள்வார்.

# ஜப்பான் நீதிபதி மோட்டூ நுகுசி இலங்கைக்கு இரகசிய விஜயம்



கொழும்பு, ஒக்.28

கம்போடியாவில் போர்க்குற்றங்களை விசாரிக்கும் தீர்ப்பாயத்தில் இடம்பெற்றிருந்த ஜப்பானிய நீதிபதி மோட்டூ நுகுசி, இலங்கைக்குப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். நீதிபதி மோட்டூ நுகுசி மூன்று பேர் கொண்ட ஜப்பானிய குழுவுக்குத் தலைமை ஏற்று அவர் இலங்கை வந்துள்ளார். இந்தக் குழுவினர் நேற்றுமுன்தினம் காலை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சுக்குச் சென்று, பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்னவுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். இந்தக் கூட்டத்தில், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, இலங்கை விமானப்படைத் தளபதி கபில ஜெயம்பதி, கடற்படைத் தளபதி அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தனர். எனினும், போர்க்குற்ற விவகாரங்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த ஜப்பானிய நீதிபதி மோட்டூ நுகுசி, எதற்காக இலங்கை வந்துள்ளார் என்ற தகவல்கள் ஏதும் இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்படவில்லை. (உ)

## இன்று நாளும் கோளும்

28.10.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 11 ஆம் நாள்
அட்டமி பகல் 01.58 வரை | திருவோணம் பகல் 02.55 மணி வரை | சித்தயோகம்
இராகுகாலம் 09.00 - 10.30 | சுபநேரம் 10.45 - 11.45 | எமகண்டம் 01.30 - 03.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பிரயாணம் | செலவு | அமைதி | சிந்தனை | பாராட்டு | நன்மை | சோதனை | ஆக்கம் | சாதனை | ஊக்கம் | நட்டம் | நாந்தம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயர் மாற்றத்தில் உள்நோக்கம் இல்லை



கொழும்பு, ஒக். 27

அமைச்சரவை அந்தஸ்த்து வழங்கியதாலேயே அட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் பூல்பேங்க் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தொண்டமானின் பெயரை எடுக்க வேண்டும் என்பது எனது நோக்கம் அல்ல என மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் திகாம்பரம் தெரிவித்தார். ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலைய விவகாரம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர்,

"மலையக மக்களுக்கு குறிப்பாக பெருந்தோட்ட மக்களுக்கு எனது அமைச்சின் ஊடாக பாரிய அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கு பாதிப்புகள் ஏற்பட்டு வருவதாக தெரிகின்றது. மலையகத்தின் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் பெயர் சூட்டப்பட்ட அட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் எனது அமைச்சுக்கு வழங்கிய அமைச்சரவை அந்தஸ்து அடிப்படையில் பூல்பேங்க் என பெயர் மாற்றம் செய்யப்பட்டதே தவிர தொண்டமானின் பெயரை அங்கிருந்து எடுக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை" - என்றார். (உ)

# உலக வங்கி 200 மில்லியன் நிதியுதவி

கொழும்பு, ஒக். 27

இலங்கையில் ஆரம்ப சுகாதாரப் பணிகளை மேம்படுத்துவதற்காக உலக வங்கி ஒத்துழைப்பு வழங்குவதற்கு உறுதி தெரிவித்திருப்பதாக சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

உலக வங்கியின் பிரதிநிதிகள் சுகாதார அமைச்சில் சமீபத்தில் சுகாதார அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்னவுடன் இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த பேச்சுவார்த்தையின் போது ஆரம்ப சுகாதார திட்டங்களை தேசிய மட்டத்தில் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக சுமார் 200 மில்லியன் ரூபா வழங்குவதற்கு உலக வங்கி தயாராகவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவதற்காக உலக வங்கி கடந்த சில வருடங்களாக சுகாதார அமைச்சிற்கு நிதியுதவி வழங்கியுள்ளது. இந்த நிதியுதவி மூலமான திட்டங்களின் முன்னேற்றம் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. இந்த திட்டங்கள் தொடர்பில் உலக வங்கி அதிகாரிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். (உ)



## புலனோடை இருக்கிற புலம் பெயர்ந்த சொந்தக்காரர்

பெரியவன் எண்டு சொல்லுறது உயரத்தைப் பாத்துச் சொல்லுற வசனம் இல்லை. பாங்க் புத்தகத்திலை உள்ள மிச்சத்தைப் பாத்துச் சொல்லுறதும் இல்லை. பெரிய மனுசர் எண்டது அவயின்ரை குணத்தையும், நடத்தையையும், எண்ணத்தையும் வைச்சுப் பாக்கிறது எண்டது எனக்கு நேற்றைக்குத்தான் விளங்கிச்சிது. படிச்சவன்.. படிச்சவன் தான்ரா..

ஒரு மாதமா எங்கடை சிங்கப்பூரான் வீட்டிலை அவற்றை பேரன் பேத்தியள் வெளியிலை இருந்து வந்து நிண்டவை. பாக்க டீசன்ரா, அரியண்டைச் சட்டையளோடை இல்லாமல், கையிலை புத்தகங்களோடைதான் எந்த நேரமும் ஆக்களைப் பாக்கலாம். பின் நேரத்திலை வெளிக்கிட்டுத் தங்கடை சொந்த பந்தங்களின்ரை வீட்டை போய் அவயளோடை இருந்து கதைப்பினம். அவையளுக்கு என்ன பிரச்சினை எண்டு கேட்டு அதுகளை ஒன்டொன்டாச் செய்தினம். நேற்றைக்குப் போட்டினம்.

ஒரு சொந்தத்துக்கு ஒரு கை இல்லை. ஆனாலும் அவர் வேலைக்கு போறவர். வசதி குறைவெண்டதாலை அவற்றை வீடு கொஞ்சம் அரை குறையாக் கிடந்திது. அதை திருத்த வேணும் எண்டு பாத்தவை. அந்த வேலை இப்ப நடக்கிது.

இன்னொரு சொந்தம் புருசனில்லாதவ. பிள்ளையள் மூண்டு. அவவோடை கதைக்கேக்கை அவ சொல்லியிருக்கிற கொஞ்சக் காசு இருந்தா தாங்கள் மிளகாய்த் தூள், மல்லித் தூள், அரிசி மா திரிச்சு வித்தால் குடும்பத்தைப் பாக்கலாமெண்டு. உடனை அவவின்ரை முத்தத்திலை ஒரு சின்னக் கொட்டில் ஒரு சின்ன அரைக்கிற மிசின். அதுக்குரிய சாமான்கள். இப்ப வேலை நடக்கிது.

வேறை ஒரு சொந்தம் கண்ணி வெடியிலை சிக்கி அவருக்கு ஒற்றைக் காலில்லை. வாட்டப் பம் ஒண்டிருந்தால் கிணறுகள் இறைச்சுச் சம்பாதிக்கலாமெண்டதாலை உடனை அந்தாளுக்கு ஒரு வாட்டர் பம்மும் அதுக்கு வேண்டிய சமான் சக்கட்டும். அதோடை ஒரு சின்னத் தள்ளு வண்டியும். அவர் இப்ப கிணறு, தோட்டம் தூரவெண்டு இறைக்கிற வேலை.

இன்னொண்டுக்கு ஒட்டோ ஒண்டை வாங்கினா தேப்பனும், மேனும் மாறி மாறி ஓடுவினம் எண்டு கேட்டவ. அவவின்ரை புருசனுக்கு கால் அத்தினை வழங்காது. ஆனா ஓட்டோ ஓடலாம். லைசென்சும் வைச்சிருக்கிறார். அப்ப அவருக்குப் பாதியை கட்டிவிட்டினம். பாதி அவர் உழைச்சுக் கட்ட வேணும். அவேன்ரை வீட்டு முத்தத்திலை இப்ப ஒரு ஓட்டோ நிக்கிது

வழமையா வெளியிலை இருந்து வாறவையிலை கொஞ்சப் பேர் சொந்தக் காறர் வீட்டை போவினம். சொக்கிலேற்றுகளையும், அதோடை ஏதேன் உடு புடவை, கையிலை கசக்கிக் கொஞ்சக் காசு எண்டு குடுப்பினம். கோயில் குளம், பீச்சு, கடை கண்ணி எண்டு சுத்துவினம். அதுக்கை சிலரைப் பாக்க விசராக்கும். உடம்பிலை உள்ள மேடு பள்ளம் எல்லாம் தெரியச் சட்டை போட்டுக் கொண்டு குளிக்காத சனங்கள் மாதிரி....

மற்றவை கொஞ்சப்பேர் வேறை மாதிரி. கோயிலுக்குக் காசு குடுப்பினம். சொந்தங்களெண்டு பாவம் பாத்துக் காசாக் குடுத்துக் கெடுத்துப் போட்டுப் போவிடுவினம். கன தூரத்துக்கு யோசிக்கிறேல்லை. அக்கறையோடை ஒண்டைச் செய்யிறதுமில்லை.

உண்மையிலை சிங்கப்பூரான்ரை பேரன் பேத்தி செய்தது கோயிலைக்கட்டி கும்பாபிசேகத்தைச் செய்ததைப் போல ஒரு வேலை.

"மீனைப் பிடிச்சுக் குடுத்து ஆக்களைக் கெடுக்காதை. மீனைப் பிடிக்கக் காட்டிக் குடு. அவை பிடிச்சுத் திண்டு பழகட்டும்" எண்டு அப்பு அடிக்கடி சொல்லுறவ ஏன் எண்டு இப்ப விளங்கிது.

- வில்லங்கம் விநாசி

# இலங்கையில் ஜேர்மன் 9 கோடி முதலீடு

கொழும்பு, ஒக். 27

2005ஆம் ஆண்டுக்கும், 2016ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் ஜேர்மன் கம்பனிகள் இலங்கையில் 9 கோடி 80 இலட்சம் டொலர்களை முதலீடு செய்துள்ளன.

இதுதொடர்பான புள்ளி விபரங்களை இலங்கை முதலீட்டுச் சபை அறிவித்துள்ளது. ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரையில் இலங்கையில் ஆகக்கூடுதலான முதலீடுகளை மேற்கொள்ளும் நாடுகளின் பட்டியலில் ஜேர்மன் இரண்டாம் இடத்தில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)



# காணி உறுதியுடன் வீடுகள்

கொழும்பு, ஒக். 27

மலையக தோட்டங்களில் பணியாற்றும் மக்களுக்கு காணி உறுதிகளுடன் கூடிய தனி வீடுகள் வழங்கப்படவுள்ளன.

இரண்டாயிரத்து 864 வீடுகளுக்கான காணி உறுதிகள் எதிர்வரும் திங்கட்கிழமை வழங்கப்படவிருப்பதாக மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

அம்மக்களுக்கு காணி உறுதிகளுடன் கூடிய தனி வீடுகளை வழங்குவது தொடர்பில் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் கீழ், புதிய கிராமங்கள் என்ற வேலைத் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்ட வேலைத்திட்டமும் அமுலாகிறது. (உ)

# வீடமைப்பு அபிவிருத்திக்கு இந்தியா 60 கோடி நிதியுதவி

கொழும்பு, ஒக். 28

இலங்கையின் வீடமைப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தியா 60 கோடி ரூபாவை வழங்கியிருப்பதாக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சிறிபோபுர பிரதேசத்தில் "சந்தோஷகம" என்ற பெயரிலான 44ஆவது கிராமம் நேற்று முன்தினம் அங்கு ரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அமைச்சர் சஜித்



பிரேமதாச பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வின்போது இந்தியாவும் இலங்கையும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

இதற்கான உடன்படிக்கையின் கீழ் 1200 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இவற்றில் 600 வீடுகள் தென்மாகாணத்திலும், ஏனைய வீடுகள் 25 மாவட்டங்களிலும் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெல்லியடிச் சந்தையில் மருத்துவப் பரிசோதனை



நெல்லியடி புதிய சந்தைப் பகுதியில் நேற்று தொற்று நோய்க்கான இரத்த பரிசோதனை மற்றும் இலவச மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி சுதோக் குமார் மற்றும் கரவெட்டி சுகாதார பரிசோதகர்கள் இணைந்து சந்தைப்பகுதியில் இந் நடமாடும் மருத்துவ சேவையினை ஏற்பாடு செய்திருந்தனர்.

நெல்லியடி சந்தையில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கும் பொதுமக்களும் என பலர் இதன்போது பயன்பெற்றனர். (உ-11)

## அந்த நாள் ஞாபகம்.....!



**28.10.2006**

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே 8 மாதங்களாகத் தடைப்பட்டிருந்த அமைதிப் பேச்சுக்கள் ஜெனீவாவில் மீண்டும் ஆரம்பமாயின.

### இரண்டு மாவட்டங்களுக்கு

# மண்சரிவு எச்சரிக்கை

தற்பொழுது நிலவும் கடும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக இரு மாவட்டங்களுக்கு மண்சரிவு தொடர்பான முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் பிரதீப் கொடிப்புலி தெரிவிக்கையில்,

நேற்று அதிகாலையுடன் கடந்த 24 மணித்தியால காலப்பகுதியில் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் 75 மில்லிமீற்றருக்கு மேற்பட்ட மழை வீழ்ச்சி பதிவானது.

கண்டி மாவட்டத்தில் மததும்பற பிரதேச செயலக பிரிவுக்கும் உடதும்பர பிரதேச செயலக பிரவிற்கும் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் ஹங்குரான்கெத்த பிரதேச செயலக பிரிவும் அதன் சுற்றுப்புறங்களிற்கும் மண்சரிவு தொடர்பான முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (உ)

# பெயர் மாற்றத்தை எதிர்த்து நேற்றும் போராட்டம்

தொழிற்பயிற்சி நிலைத்தின் பெயர்ப் பலகையிலிருந்து தொண்டமானின் பெயர் நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றும் ஹட்டனில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஹட்டன் பொகவந்தலாவ பிரதான வீதியை மறித்து பொகவந்தலாவ நகரில் அப்பகுதியைச் சேர்ந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்கள் நேற்று மாலை கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து அப்பகுதியெங்கும் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். (உ)





வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வு வலயக்கல்விப் பணிப்பாளர் நந்தகுமார் தலைமையில் நேற்று நடைபெற்றது. (உ-11)

# மழைக் காலநிலை தொடரும்

கொழும்பு,ஒக்.28

நாட்டில் மாலை நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் அதிகம் என்று வளிமண்டவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் பிற்பகல் 2 மணியின் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். யாழ். மாவட்டம் , மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணத்தில் கரையோரப் பிரதேசங்களிலும் காலை நேரங்களிலும் மழை பெய்யும். வட-அரைக் கோளத்தில் இருந்தும், தென்-அரைக் கோளத்தில் இருந்து வரும் காற்று சந்திக்கும் தாழமுக்கப் பிரதேசம் இலங்கைக்கு அருகில் இருப்பதால் இந்தக் காலநிலை ஏற்படுவதாக திணைக்களத்தின் வானிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக மத்திய, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் வவுனியா மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலமான காற்று வீசக்கூடும். இடிமின்னலிலிருந்து பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (உ)

# ஆடுகள் அன்பளிப்பு



பருத்தித்துறை, ஒக்.28

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிக்கும் 7 வறுமை கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களுக்கு நல்ல இன ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் நேற்று இந் நிகழ்வு நடைபெற்றுள்ளது. கால்நடை வைத்திய அதிகாரி திருமதி சரோஜினிதேவி மகேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் வடமாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் சிவக்கொழுந்து கலந்து கொண்டு பயனாளிகளுக்கு ஆடுகளை வழங்கி வைத்தார். (உ-121)

# மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி



சுவிஸ் நாட்டை மையமாகக் கொண்டு செயற்படும் எழுகை அமைப்பின் நிதி அனுசரனையில் எழுகை இலங்கைக் கிளையினரால் வவுனியா மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டது. வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரையிறுதியில் வீனஸ்

உலகப் பெண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டியில் அரையிறுதிக்கு அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், ஸ்பெயினின் கார்பின் முகுருஜாவை வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

தரவரிசையில் முதல் எட்டு இடங்களைப் பிடித்துள்ள வீராங்கனைகள் மாத்திரமே பங்கேற்கும் உலகப் பெண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் நடந்து வருகிறது.

எட்டு வீராங்கனைகளும் 'வெள்ளை', 'சிவப்பு' என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

'வைட்' பிரிவில் நேற்றுமுன்தினம் நடந்த கடைசி லீக் ஆட்டத்தில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் 7-5, 6-4 என்ற புள்ளிக் கணக்கில் ஸ்பெயினின் கார்பின் முகுருஜாவைச் சாய்த்தார்.

இந்தப் பிரிவில் பிளிஸ்கோவா, வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோர் தலா 2 வெற்றிகள், ஒரு தோல்வியுடன் அரையிறுதிக்குள் நுழைந்தனர். ஆஸ்டாபென்கோ, முகுருஜா ஆகியோர் தலா ஒரு வெற்றி, 2 தோல்விகளுடன் வெளியேறினர்.

## தொடர்ச்சிகள்

### பசிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கொள்ளப்பட்ட போதே நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்துக்குரிய 36.5 மில்லியன் ரூபாய் நிதியை மோசடி செய்தமை தொடர்பில் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. (எ)

### பங்காளிகளுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியலமைப்பு தொடர்பான சந்திப்புகளால், கடந்த 19ஆம் , 20ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த, கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெறவில்லை. இந்த நிலையிலேயே, இன்று மாலை 6 மணியளவில் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படவுள்ளது. இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் நான்கு பங்காளிக் கட்சிகளும் பங்கேற்கவுள்ளதை உறுதிப் படுத்தியுள்ளன. வழிநடத்தல் குழுவின் அறிக்கை தொடர்பாக தமிழ் அரசுக் கட்சி சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் நிலையில், ரெலோ, புளொட் ஆகியன பெரிதாக எந்தக் கருத்தையும் வெளியிடாமல் இருக்கின்றன. எனினும், ஈபிஆர்எல்எவ் இந்த அறிக்கையை கடுமையாக விமர்சித்து வருகிறது. இந்தநிலையில், நாளைய கூட்டத்தில், காரசாரமான விவாதங்கள் இடம்பெற வாய்ப்புகள் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

### உயிர் மாய்த்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிரிசாந் சுனேந்திரா எனது கணவர் கடந்த 03.09.2017 ரூபா 1 கோடி 17 லட்சம் கொடுத்து ஏமாந்த காரணத்தினால் தற்கொலை செய்திருந்தார். என் கணவர் இல்லாத வாழ்க்கையை என்னால் வாழ முடியவில்லை. என் கணவர் ஒரு வீல் கதிரையில் உட்காந்து எம்முடன் வாழ்ந்தால்கூட போதும் அந்த அளவுக்கு என்றாலும் இறைவன் தந்தால் போதும் என வேண்டினேன். பலன் கிடைக்கவில்லை. பிள்ளைகளுக்காக வாழலாம் என்றாலும் என் பிள்ளைகளின் கேள்விக்கு என்னால் பதில் கூற முடியவில்லை.

✶ அப்பா எப்ப வருவார்?

✶ அப்பா கண் திறந்திட்டாரா? எப்ப பாப்பார்?

✶ ஏன் வரவில்லை

✶ போஸ் மோட்டத்தில் தந்தையைப் பார்த்துவிட்டு எங்கட அப்பா வெள்ளைதானே ஏன் கறுத்தவர்? வெள்ளையா வருவாரா?

✶ அப்பா வர நாங்கள் பாக்குக்குப் போவோம்.

அடுக்கடுக்கான என் பிள்ளைகளின் கேள்விக்கு என்னால் பதில் கூறமுடியவில்லை??? எத்தனை காலம் ஏமாற்றுவது? என் கணவரின் இறுதிக் கடிதத்தை இத்துடன் இணைத்துள்ளேன். எங்கள் சாவுக்கு சிறிசங்கர் மனைவி சுகன்யா, சிறிதரன் ஆகியோரே காரணம். தவறு செய்பவர்களை விட செய்யத் தூண்டுபவர்களே குற்றவாளி என்பதைப்போல. நாங்கள் இந்நிலைக்கு வர இவர்களே காரணம். எங்களுக்கு என் கணவரின் விருப்பப்படி நீதியை ஆராய்ந்து நீதியைப் பெற்றுத்தர தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் உயிரைவிட வேறு எதுவுமில்லை. எங்கள் பக்க நியாயத்தை நிரூபிக்க. கடவுள் ஒரு சில பேரையே சத்தியத்தை நிலைக்க பூவுலகில் படைக்கின்றார். அந்த வகையில் நாங்கள் உங்களை நினைக்கின்றோம். இந்த வழக்கை தங்கள் பார்வையில் கீழ் எடுத்து நியாயத்தைப் பெற்றுக் கொடுங்கள்.

இவ்வண்ணம்
தற்கொலை செய்தவரின் பெயர்
க.சுனேந்திரா
பிறப்பு அத்தாட்சி பத்திரத்தில் சுனேந்திரா என்றே உள்ளது.
வழக்கு இலங்கம் 893

**குடும்பத்தினருக்கு எழுதிய கடிதம்**

அன்புள்ள அம்மா அப்பா, அண்ணா, தம்பி அன்ரா...

என்னை மன்னியுங்கள் பிறந்தவர்கள் யாவரும் இறப்பவர்களே.

ஒன்றை மட்டும் நினைத்து மனதை ஆறுதல் படுத்துங்கள் உங்கள் பிள்ளைகளின் எல்லா ஆசைகளையும் நிறைவேற்றியுள்ளீர்கள் என்று. வாழ்ந்த வருடங்கள் குறைவானாலும் நான் இறைவனின் அனுக்கிரகத்தை பெற்ற காரணம் நான் உங்களுடன் வாழ்ந்த வாழ்வும் நிறைவானதே. 1000 குறைகள் சூழ இருந்தும் அவையாவும் ஒரு தூசிக்கு சமன் ஆக வைத்து மேலாங்கிய அன்பைத் தந்து என் புருசன் தந்த வாழ்வும் நிறைவானதே. ஒரே ஒரு கவலைதான். நாங்கள் குடும்பமாக நீடித்த காலம் வாழ ஆசைப்பட்டோம். இறுதிவரை அதற்காக போராடினோம். முடியவில்லை. போகின்றோம். என்ர அம்மாவைக் கவனித்துக் கொள்ளுங்கள் என்னை விட என் புருசன் அவாவை இறுதிக்காலம் வைத்துப்பார்க்க ஆசைப்பட்டார். அதுவும் முடியவில்லை நாங்கள் போகிறோம்.

அன்புடன் பவா, பேரப்பிள்ளைகள்.

என்னுடையதும் என் பிள்ளைகளுடையதும் இறுதிச் சடங்குகள் என் வீட்டார் நடத்த வேண்டும். எக்காரணம் கொண்டும் என் கணவர் வீட்டுப் பகுதிக்கு கொடுக்க வேண்டாம். இதுவே எனது விருப்பம். தேவைப்பட்டால் இக்கடிதத்தைக் காட்டி பொலிஸாரிடம் எப் பிரச்சினையும் இல்லாமல் எம் மரண வீட்டை மிகவும் எளிமையாக மேளம் போஸ்போட்டம் இல்லாமல் உடனடியாக எடுக்கவும். அன்பு மகள் சுளோத்திரா (பவா) - என்றுள்ளது. (எ)

### தாயும் மூன்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புக்களும் இல்லாமல் நட்பின் அடிப்படையில் , நம்பிக்கையின் அடிப்படையில் கொடுக்கப்பட்டு உள்ளது. கடனை ஆறு மாத காலத்திற்கு பின்னர் திருப்பி கேட்ட போது , காசோலையை வழங்கியுள்ளார். குறித்த காசோலையை வங்கியில் வைப்பு செய்ய போது , வங்கியில் பணம் இல்லாமல் அது திரும்பியுள்ளது. அதன் பின்னர் கடனை கேட்க நண்பன் , நண்பனின் மனைவி மற்றும் நண்பனின் தம்பியிடம் சென்ற போது வாங்கிய கடனை கொடுக்காது ஏமாற்றியதுடன் முடிந்தால் பணத்தினை வாங்கி பார் என சவால் விட்டுள்ளனர். அத்துடன் தம்பியையும் வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்து விட்டனர். அதன் பின்னர் கடன் தொகை திருப்பி தராது ஏமாற்றியமை தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணையின் பின்னர் பத்து இலட்ச ரூபாய் பணத்தினை சிறிது சிறிதாக கடனை பெற்றவர் கொடுத்துள்ளார். மிகுதிப் பணம் கொடுக்கவில்லை.

அந்நிலையில் கடந்த ஒகஸ்ட் 30ஆம் திகதி வழக்குக்காக நீதிமன்றுக்கு சென்று வந்த பின்னர் மறுநாள் 31ஆம் திகதி குடும்பத்துடன் உயிரை மாய்த்து கொள்வதற்கு முயற்சித்துள்ளார்கள். முதலில் கணவன் மருந்தை குடித்துள்ளார். அவர் மருந்தை குடித்து அவஸ்தைப்பட்டத்தை பொறுக்க முடியாத மனைவி தானும் மருந்தை அருந்தாது தனது பிள்ளைகளுக்கும் மருந்தை அருந்த கொடுக்காது கணவனை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். உடனடியாக கணவனை வைத்திய சாலைக்கு கொண்டு சென்று அவரை காப்பாற்றும் முயற்சித்துள்ளார்.

மருத்துவ மனையில் சிகிச்சை பயனளிக்காத நிலையில் கணவனான இராமன் கிருஷாந்தன் கடந்த மாதம் 03ஆம் திகதி உயிரிழந்துள்ளார். கணவன் சிகிச்சை பெறும் வேளையில் வைத்திய சாலையில் வைத்து தாய் , மற்றும் சிறிய தாயிடம் தான் உயிரிழந்தால் , தனது மனைவி பிள்ளைகளை கவனமாக பார்க்குமாறு உறுதி வாங்கியுள்ளார்.

இந்நிலையில் கணவனின் உயிரிழப்பின் பின்னர் மனைவி பிள்ளைகளை உறவினர்கள் பாதுகாப்பாக பார்த்துகொண்ட நிலையில் நேற்று வீட்டில் தாயார் மட்டும் இருந்த நிலையில் அவரை தூங்க வைத்த பின்னர் தனது பிள்ளைகளின் உயிரை மாய்த்த பின்னர் , தானும் உயிரிழந்துள்ளார் சுனேந்திரா எனும் குடும்ப பெண்.

அவர் தனது உயிரை மாய்த்து கொள்ள முதல், யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மற்றும் தனது குடும்பத்தினருக்கு இரு கடிதங்களை எழுதி வைத்துள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

### தடயப்பொருள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலனின்றி டொன்பொஸ்கோ ரிக்மன் என்ற இளைஞர் உயிரிழந்திருந்தார். இந்த சம்பவம் குறித்து இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில் பாரிய விசாரணைகள் விசேட பொலிஸ் தரப்பால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதில் ஒரு கட்டமாக முப்படைகளும் விசாரணைக்குட் படுத்தப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் நேற்று முன்தினம் கடற்படை முகாமில் விசாரணை நடத்தப்பட்டது. நேற்று விசேட அதிரடிப்படை முகாமில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே குறித்த முச்சக்கர வண்டி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து விரைவில் கைது நடவடிக்கை இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்
◆ மரண அறிவித்தல்
◆ நினைவஞ்சலி
◆ கண்ணீர் அஞ்சலி
கட்டணம் இன்றி பிரசுரிக்க
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
எதிரொலி Ethiroli
021 3004848
நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு: பிரதிப் பிரதமர் பதவியிழப்பு

சிட்னி,ஒக்.28

இரட்டைக்குடியுரிமையுடன் தேர்தலில் போட்டியிட்டதால் பிரதிப் பிரதமர் பானபி ஜோய்ஸ் உட்பட 5 அரசியல்வாதிகளும் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என ஆஸ்திரேலியநீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு வாங்கியுள்ளது.

குறித்த ஐவரும் பிறநாடுகளைப் பூர்வீகமாகக் கொண்டிருந்தாலும், ஆஸ்திரேலியக் குடியுரிமையும் பெற்றவர்கள். இவர்கள் தேர்தலில் போட்டியிடும் போது கூட தமது பூர்வீக நாட்டுக் குடியுரிமையில் இருந்து நீங்காமல், இரட்டைக் குடியுரி



மையுடனேயே போட்டியிட்டதால், அது ஆஸ்திரேலிய அரசியலமைப்புக்கு முரணானது எனக் கூறியே குறித்த ஐவரின் பதவியையும் நீதிமன்றம் பறித்துள்ளது.

இவ்வாறு பதவியிழந்தவர்களில் நால்வர் செனட் உறுப்பினர்கள். பிரதிப் பிரதமர் மாத்திரமே நாடாளுமன்ற உறுப்பினராவார். தற்போது ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் ஆளும் லிபரல் கட்சி ஒரேயொரு ஆசனத்தால் மட்டுமே பெரும்பான்மை பெற்றுள்ள நிலையில், தற்போது அந்தக் கட்சியைச்சேர்ந்த பிரதிப்பிரதமர் பதவியிழந்திருப்பதால், தற்போது தொங்கு நாடாளுமன்ற நிலை தோன்றியுள்ளது.

இதேவேளை விரைவில் நடைபெறவுள்ள இடைத்தேர்தலில் தனது பூர்வீக நாடான நியூஸிலாந்துக் குடியுரிமையை ரத்து செய்துவிட்டு, போட்டியிடவுள்ளதாக பானபி ஜோய்ஸ் கூறியுள்ளார்.

சிலவேளைகளில் இந்த இடைத்தேர்தலில் அவர் தோல்வியுற்று, லேபர் கட்சிக்கு அந்த ஆசனம் கிடைத்தால், ஆட்சியும் லேபர் கட்சிக்குச்செல்லும்நிலையும்தோன்றியுள்ளது.

அவ்வாறு லேபர் கட்சி ஆட்சியமைத்தால், சட்டவிரோதக் குடியேறிகள் விடயத்தில் ஆஸ்திரேலியாவின் கடுமையான நிலைப்பாட்டில் தளர்வு நிலை தோன்றும் எனக் கூறப்படுகின்றது. (அ)

# நடுக் கடலில் மூழ்கி 54 அகதிகள் பலி



ஜேர்மனி.ஒக்.28

சட்டவிரோதமாகப் படகில் அழைத்து வரப்பட்ட அகதிகளில் 54 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவத்துக்கு மூளையாகச் செயல்பட்ட நபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஐரோப்பியாவை நோக்கி நூற்றுக் கணக்கான அகதிகளை வலுக்கட்டாயமாக ஒரு கும்பல் கடத்திக் கொண்டு படகில் அழைத்து வந்தது.படகானது நடுக் கடலில் வந்த போது பாரம் தாங்காமல் மூழ்கிய நிலையில், 54 அகதிகள் பரிதாபமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார்கள்.

இந்தச் சம்பவத்தில் மூளையாக இருந்து செயல்பட்ட ஈராக் நாட்டை சேர்ந்த 27 வயதான இளைஞரைப் பொலிஸார் ஜேர்மனியில் கைது செய்துள்ளனர்.குறித்த நபர் கடந்த 2015இல் ஜேர்மனிக்கு மனைவி மற்றும் குழந்தையுடன் வந்ததாகவும், நிரந்தரமாகப் புலம்பெயர விண்ணப்பித்திருந்த நிலையில் வரையறுக்கப்பட்ட குடியிருப்பு அனுமதி மட்டுமே அவருக்குக் கிடைத்ததும் தெரியவந்துள்ளது.

இளைஞர் மீது நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வரும் நிலையில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் 3லிருந்து 15 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளது. இதுகுறித்து வழக்கறிஞர்கள் சார்பில் பேசிய நபர், மனிதக் கடத்தலில் ஈடுபடும் கும்பலைச் சேர்ந்த அந்த இளைஞர் 320 அகதிகளைத் துருக்கியிலிருந்து கிரீஸ் படகில் அழைத்து வந்துள்ளார்.

ஆபத்துக் காரணமாகப் படகில் ஏறப் பலர் மறுத்த நிலையில் அவர்களைத் துப்பாக்கி முனையில் தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து இளைஞர் மிரட்டிப் படகில் ஏற்றியுள்ளார். அதன் பிறகே கடலில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது என தெரிவித்துள்ளார்.



# 'பிக்பாஸ்' நாயகன் வெள்ளித் திரையில்


சென்னை,ஒக்.28

பிக்பாஸ் நிகழ்ச்சியின் வெற்றியாளர் ஆரவ் முதன் முறையாகக் கதாநாயகனாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

சிம்புவை வைத்துச் சிலம்பாட்டம் படத்தை இயக்கிய சரவணன் இயக்கத்தில் நடிக்கவிருக்கிறார்.விஜய்பார்கவி எண்டர்டெயின்மென்ட் இந்தப் படத்தைத் தயாரிக்க உள்ளதாக ஆரவ் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

கதாநாயகி மற்றும் இதர கலைஞர்கள் குறித்த விபரங்கள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ரோபோவுக்கு குடியுரிமை



சவுதி அரேபியா,ஒக்.28

பல்வேறு நாடுகளில் வாழும் வெளிநாட்டினருக்கு குடியுரிமை கிடைப்பதில் கடும் பிரச்சினையும், சிக்கலும் உள்ளது.

ஆனால் ஒரு பெண் ரோபோவுக்கு சவுதிஅரேபிய அரசு குடியுரிமை வழங்கி உள்ளது.அந்த ரோபோவின் பெயர் சோபியா. இதை ஹாங்காங் கம்பெனியான 'ஹன்சன் ரோபோடிக்' நிறுவனத்தை சேர்ந்த டேவிட் ஹன்சன் வடிவமைத்துள்ளார்.

இது பெண் போன்று மிக இனிமையாகப் பேசுகிறது. கேட்கும் கேள்விக்கு மனிதர்கள் போன்று சரமாரியாக பதில் அளிக்கிறது. இந்த ரோபோ அமெரிக்க நடிகை ஆட்ரி ஹெப்பர்ன் போன்ற தோற்றத்தில் உள்ளது. உலக வரலாற்றில் ரோபோவுக்கு முதன் முறையாகக் குடியுரிமை வழங்கிய நாடு என்ற பெருமையை சவுதி அரேபியா பெற்றுள்ளது.



# டிரம்ப் தம்பட்டம்

அமெரிக்கா,ஒக்.28

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், "நான் மிகவும் புத்திசாலியான மனிதன்" என்று கூறியுள்ளார்.

அமெரிக்கா ஜனாதிபதி டிரம்பின் பல்வேறு செயல்பாடுகள் காரணமாக, அவர் ஊடகங்களால் விமர்சிக்கப்படும் நபராக உள்ளார். அப்படி ஊடகங்களால் விமர்சிக்கப்படும் போது, டிரம்ப் ஊடகங்கள் வேண்டும் என்றே தன்னைப் பற்றித் தவறான செய்திகளைத் வெளியிடுகின்றன என்று தெரிவித்தார். அதுமட்டுமின்றித் தான் செய்யாத ஒன்றைச் செய்ததாகக் கூறிச் செய்தி வெளியிட்ட இரண்டு தனியார் செய்தி நிறுவனங்களுக்கு டிரம்ப் எச்சரிக்கையும் விடுத்திருந்தார்.

இந்த நிலையில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஜெப் பிளாக் என்பவர் டிரம்பின் ஆட்சி மற்றும் நிர்வாகத் திறமைக்கு எதிராகக் கருத்துக்கள் தெரிவித்து வருகிறார். இதற்குப் பதில் அளிக்கும் விதமாக, ஊடகங்கள் என்னை மிகைப்படுத்தித் தவறான ஒருவராகக் காட்டுகின்றன. நான் மிகவும் புகழ் பெற்ற கல்லூரி ஒன்றில் படித்துள்ளேன்.சிறப்பான மாணவனாக இருந்தேன். அங்கு மிகவும் நன்றாக செயல்பட்டேன். நான் மிகவும் புத்திசாலியான மனிதன்.

ஆனால் பத்திரிக்கை மற்றும் ஊடகங்கள் நான் எப்படிப்பட்டவனோ அதற்குத் தொடர்பில்லாத மற்றொருவனாக சித்தரிக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.

# தீர்க்கமான நடவடிக்கை எடுக்குக! பாகிஸ்தானிடம் அமெரிக்கா தெரிவிப்பு

அமெரிக்கா, ஒக். 28

தீவிரவாதிகளுக்கு எதிராகத் தீர்க்கமான நடவடிக்கையைப் பாகிஸ்தான் எடுத்தே தீர வேண்டும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க செய்தித் தொடர்பாளர் ஹிதர் கூறும்போது, "தீவிரவாதத்துக்கு எதிரான பாகிஸ்தானின் நடவடிக்கை குறித்த எங்களது நிலைப்பாட்டைப் பல முறை அந்த நாட்டிடம் தெரியப்படுத்தி விட்டோம்.பாகிஸ்தான் அவர்களது எல்லைப் பகுதியிலுள்ள தீவிரவாதத்துக்கு எதிராகத் தீர்க்கமான நடவடிக்கையை எடுத்தே தீர வேண்டும்" என்றார்.பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் சென்ற அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ரெக்ஸ் டில்லர்



சனும் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையை பாகிஸ்தான் அதிகரிக்க வேண்டும் என்று கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மன்னிப்பு கேட்டார் இம்ரான் கான்

பாகிஸ்தான்,ஒக்.28

நீதிமன்றில் மன்னிப்புக் கேட்டார் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் பாகிஸ்தான் தெரிக்-இ-இன்சாப் கட்சித் தலைவருமான இம்ரான் கான்.

இவர்மீது வெளிநாடுகளில் இருந்து சட்ட விரோதமாகத் தனது கட்சிக்கு நன்கொடை பெற்றதாகத் தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்கப்பட்டது. இதை விசாரணைக்கு ஏற்ற தேர்தல் ஆணையத்தை விமர்சித்த இம்ரான் கான் மீது அவமதிப்பு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் ஆஜராகாமல் இருந்த இம்ரானுக்கு எதிராகத் தேர்தல் ஆணையம் 2 வாரத்துக்கு முன்பு கைது ஆணை பிறப்பித்தது. மேலும் 26ஆம் திகதி ஆஜர்படுத்துமாறும் உத்தரவிட்டது.

இதை எதிர்த்து இம்ரான் தாக்கல் செய்த மனுவை விசாரித்த இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் கைது வாரன்ட்டை ரத்துச் செய்தது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது இம்ரான் கான் நேரில் ஆஜரானார்.

மேலும் இந்த விவகாரத்தில் இம்ரான் கான் மன்னிப்புக் கோரும் மனு ஏற்கெனவே சமர்ப்பித்துள்ளதாக அவரது வழக்கறிஞர் தெரிவித்தார். ஆனால் இம்ரான் புதிதாக எழுத்து பூர்வமாக மன்னிப்புக் கோர வேண்



டும் என நீதிபதிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து மீண்டும் மன்னிப்புக் கோரும் மனுவைச் சமர்ப்பித்தார். இதை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், வழக்கைத் தள்ளுபடி செய்ததுடன் வரும் காலத்தில் கவனமாகப் பேசுமாறு இம்ரானுக்கு எச்சரிக்கை விடுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli



# கட்டலோனியா தனி நாடாகப் பிரகடனம்

ஸ்பெயினில் இருந்து தனி நாடாகப் பிரிந்து விட்டதாக கட்டலோனிய நாடாளுமன்றில் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. கட்டலோனியாவில் தனது நேரடி ஆட்சியை அமுல்படுத்த ஸ்பெயின் பிரதமர் மரியானோ ரஜோய் தலைமையிலான மத்திய அரசு திட்டமிட்டுக்கொண்டிருந்த நிலையில் கட்டலோனியா நாடாளுமன்றல் நேற்று தனி நாட்டுப் பிரகடனம் குறித்த வாக்கெடுப்பினை நடத்தியுள்ளது. இதில் சுதந்திரத்துக்கு ஆதரவாக 70 வாக்குகளும்,எதிராக 10 வாக்குகளும் பதிவாகியிருந்த நிலையில் எதிர்க்கட்சிகள் இந்த வாக்கெடுப்பை புறக்கணித்தன என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஒக்ரோபர் 11ஆம் திகதியன்று ஸ்பெயினிலிருந்து கட்டலோனியா விடுதலை பெற்று தனி நாடாகிவிட்டதாக ஒரு பிரகடனத்தை கட்டலோனிய ஜனாதிபதி கார்லஸ் பூஜ்டிமோன் மற்றும் பிற பிராந்தியத் தலைவர்கள் கையெழுத்திட்டு வெளியிட்டிருந்தனர்.

எனினும், ஸ்பெயினுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு, அந்தப் பிரகடனத்தை செயல்படுத்துவதை சில வாரங்களுக்கு நிறுத்திவைப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)




# கூட்டமைப்பு எம்.பிக்கள் மீது போராட்டத்தைத் திருப்புவோம்

கொழும்பு,ஒக்.28

அரசியல் கைதிகள் விவகாரத்தில் சரியான தீர்வினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திடமிருந்து பெற்றுத் தரவேண்டும். இல்லையெனில் அவர்கள் நாடாளுமன்றப் பதவிகளைத் துறந்துவிட்டுத் தான் யாழ்ப்பாணத்திற்கு வர முடியும். எனத் தெரிவித்திருக்கும் 19பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கைதிகள் விடயத்தில் காத்திரமான தீர்வினைப் பெற்றுத்தராவிடின் தமது போராட்டங்களை கூட்டமைப்பின் நாடாளுமன்றப் பிரதிநிகளுக்கு எதிராகத் திருப்பப்போவதாகவும் எச்சரித்துள்ளனர். தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க மண்டபத்தில் 19 பொது அமைப்புக்களும், தமிழ் அரசியல் கட்சிகளும் இணைந்து நேற்று மாலை முக்கிய கலந்துரையாடலொன்றை நடாத்தினர். அதனைத் தொடர்ந்து பிற்பகல் 06.30 மணியளவில் குறித்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து நடத்திய விசேட ஊடக சந்திப்பில் குறிப்பிட்ட அவர்கள்,

“அரசியல் கைதிகள் விவகாரத்தில் தொடர்ந்தும் அரசாங்கத்திற்கு அழுத்தம் வழங்க முடியாது போனால் எங்களுடைய தமிழ்த் தரப்பிற்கு அழுத்தம் வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை. அரசாங்கத்திற்கு முண்டு கொடுக்கும் தரப்பினர் அரசியல் கைதிகள் விடயத்தில் அரசாங்கத்துடன் உரிய பேச்சுவார்த்தை நடாத்தி ஓர் பொருத்தமான தீர்வை உடனடியாக முன்வைக்க வேண்டும். அவ்வாறு செய்யாதவிடத்து எங்களுடைய போராட்ட வடிவங்கள் அவர்களை நோக்கித் திரும்புவது தவிர்க்க முடியாததாகி விடும்” - என்று தெரிவித்துள்ளனர். (எ)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீன ஜனாதிபதிக்கு ரணில் வாழ்த்து



சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சீன ஜனாதிபதி ஷீ ஜிங் பிங்குக்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்க வாழ்த்து தெரிவித்துள்ளார். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 19ஆவது மாநாட்டின் போது இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதி பிங் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகவும், இராணுவ ஆணைக்குழுவின் தலைவராகவும் இவர் தெரிவு செய்யப்பட்டார். இது தொடர்பில் சீன ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள வாழ்த்து செய்தியில் குறிப்பிட்ட பிரதமர் ரணில் விக்ரமசிங்க, இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உறவு வரலாற்று ரீதியான முக்கிய மைல் கல்லை எட்டியிருப்பதாகவும் சீன ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக் காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளின் நன்மைகள் இலங்கை - சீன மக்களுக்கு கூடுதலாக கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (உ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 28.10.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.